இலங்கைக் கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# பரீட்சகரின் அறிக்கை

ஆரம்பப் பரீட்சை – 2014 சனவரி

## (52) பொருளியல்

(Economics)

---

பொருளியல் பாடத்தின் வினாத்தாள் பற்றி ஒட்டுமொத்தமான துலங்கலானது திருப்திகரமான மட்டத்தில் உள்ளது. சில பரீட்சார்த்திகள் விடைகள் எழுதும்போது பல்வித கஸ்டங்களுக்கு முகங்கொடுத்துள்ளமை பரீட்சையில் குறைந்த புள்ளிகளைப் பெறக் காரணமாகியுள்ளது. குறைவாகப் புள்ளி பெற்றமைக்கு பின்வரும் காரணங்கள் புள்ளியிடும் பரீட்சகர்களால் அவதானிக்கப்பட்டுள்ளன.

## பகுதி A

**வினா இல. 01** - 40 புள்ளிகள் (20 பல்தேர்வு வினாக்கள், ஒன்றுக்கு 2 புள்ளிகள் வீதம்)
**(கட்டாய வினா)**

பொருளியல் தொடர்பான பிரயோக அறிவையும் கோட்பாட்டு அறிவையும் சோதிப்பதுவே இவ்வினாவின் குறிக்கோளாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாப்பத்திரத்தில் அவர்களால் சித்தியடைய இயலுமாயிருந்தமைக்கு அவர்கள் வெற்றிகரமாக விடையளித்துள்ளமையே காரணமாகும்.

எழுமாற்றாக விடைகளைக் கவனிக்கும்போது வினா இல. (A), (E), (I), (K), (P) ஆகியவற்றுக்கு ஒரு சிலர் மட்டுமே சரியான விடைகளை எழுதியுள்ளனர். புள்ளியிடும் பரீட்சகர்கள் வினாக்களில் பின்வரும் குறைபாடுகளை அவதானித்துக் குறிப்பிட்டுள்ளனர்:

**வினா (A)**

பரீட்சார்த்திகளுக்கு உற்பத்திச் சாத்திய வளையியைப் பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. எனவே அமையச் செலவில் அதிகரிப்பு பற்றிய அறிவு குறைவு காட்டப்பட்டுள்ளது.

**வினா (E)**

இவ்வினாவில் நிரம்பலின் நெகிழ்ச்சியைத் தீர்மானிப்பவைகளைப் பற்றி சோதிக்கப்பட்டது. ஆனால் பரீட்சார்த்திகள் பலர் சரியான விடையை எழுத இயலாதவர்களாக உள்ளனர். ஏனெனில் பெரும்பாலானோர் சரியான விடையாக இலக்கம் (2) ஐத் தெரிவுசெய்திருந்தனர்.

**வினா (I)**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவுசெய்ய இயலாதவர்களாக உள்ளனர். ஏனெனில் அவர்கள் கேள்வி, நிரம்பல் மற்றும் சமநிலை விலை என்பன பற்றி சரியாக விளங்கிக்கொள்ளவில்லை.

**வினா (K)**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் தேசிய கணக்கியல் உட்செலுத்துகைகள், மீளப்பெறுகைகள் (withdrawals) பற்றிய அறிவைக் கொண்டிருக்கவில்லை.

**வினா (P)**

குறுகிய பண நிரம்பல் ($M_1$) பற்றி போதிய அறிவு இல்லாமையை விடைகளில் காணக்கூடியதாயிருந்தது.

பொருளாதார எண்ணக்கருக்களுடன் தொடர்பான பிரயோக மற்றும் கோட்பாட்டு ரீதியான அறிவைக் கொண்டுள்ள பரீட்சார்த்திகள் மட்டுமே இவ்வினாவுக்கு அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

## பகுதி B

இப்பகுதி ஆறு வினாக்களைக் கொண்டுள்ளதோடு பரீட்சார்த்திகளுக்கு எவையேனும் 4 வினாக்களைத் தெரிந்து விடையெழுதும் சந்தர்ப்பம் தரப்பட்டுள்ளது.

**வினா இல. 02** - 15 புள்ளிகள்
**(தெரிவு வினா)**

**(a)** (i) மனித மூலதனம் பற்றி விளக்கும்படி கேட்கப்பட்டிருந்த இவ்வினாவுக்கு பெரும்பாலான மாணவர்கள் விடையெழுதியிருந்தனர். எனினும் பின்வரும் காரணங்களால் குறைவான புள்ளிகளையே பெற்றிருந்தனர்:

(1) மனித மூலதனமானது ஒரு உழைப்பு (labour) ஆகவே விளக்கப்பட்டிருந்தது.

(2) பொதுமக்களுக்குச் சொந்தமான நாணயங்களும் தாள்களும் மனித மூலதனமாகக் கருதப்பட்டுள்ளது.

(3) உழைப்பை வரைவிலக்கணப்படுத்தி உழைப்பின் பண்புக்கூறுகள் விளக்கப் பட்டிருந்தன.

(ii) மனித மூலதனத்தின் விசேட பண்புக்கூறுகள் பற்றிக் குறிப்பிடுவதற்குப் பதிலாக உழைப்பின் பண்புக்கூறுகளையே பெரும்பாலான பரீட்சார்த்திகள் குறிப்பிட்டுள்ளனர். பின்வரும் பதில்கள் மனித மூலதனத்தின் விசேட பண்புக்கூறுகள் பற்றி பரீட்சார்த்திகளுக்கு போதிய அறிவு இல்லாமையை எடுத்துக்காட்டின:

உதாரணம்:-

(1) தனியாளிடமிருந்து எடுப்பதற்கு இயலாமை

(2) ஊக்குவிக்க முடியும்

(3) ஒரு பரிசாக சம்பளங்களைப் பெறுதல்

**(b)** பொருளாதாரமொன்றில் எழுகின்ற அடிப்படைப் பிரச்சினைகளுக்கான காரணங்களையே இப்பகுதி எதிர்பார்க்கின்றது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித் துள்ளனர். ஆனால் எளிய முறையில் காரணிகளை முன்வைப்பது எப்படி என்பதில் அவர்கள் இன்னும் வளர்ச்சியடைய வேண்டும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் கட்டுரை வகை விடைகளையே எழுதியுள்ளதோடு சில பரீட்சார்த்திகளால் காரணங்களாக பின்வருவன தரப்பட்டிருந்தன:

(1) முறையான முகாமைத்துவம் இல்லாமை

(2) வேலையின்மை

(3) உழைப்பின் வினைத்திறன் இல்லாமை

மேற்கூறிய காரணிகளுக்கு மேலதிகமாக, சில பரீட்சார்த்திகள் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அவற்றை விளக்கியிருந்தனர்.

**(c)** பொருளாதாரமொன்றில் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முறைமையை விளக்கும்படியே இதில் எதிர்பார்க்கப்பட்டது. இது ஒரு இலகுவான வினாவாக இருந்ததால் பெரும்பாலான பரீட்சார்த்திகளினால் நியாயமான புள்ளிகளைப் பெற முடிந்தது. இருந்தபோதிலும் பின்வரும் பலவீனங்கள் எடுத்துக்காட்டப்பட்டன:

(1) தேவையற்றதொரு விதத்தில் பொருளாதாரப் பிரச்சினைகளை விளக்குதல்

(2) சில பரீட்சார்த்திகள் பின்வரும் பொருத்தமில்லாத காரணிகளைக் குறிப் பிட்டிருந்தனர்.,

(i) வரி விடுமுறைகளும் வரிச் சலுகைகளும்

(ii) பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முறைகளாக வணிக வங்கி களிடமிருந்து பணம் கடனாகப் பெறுதல்

**வினா இல. 03** - 15 புள்ளிகள்
**(தெரிவு வினா)**

**(a)** பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலைகள் என்பன கேள்வி, நிரம்பல்களைப் பொறுத்தமட்டில் எவ்வாறு கணிக்கப்படுகின்றன என்பதை வரைபொன்றின் துணையோடு தருவதையே நாம் பரீட்சித்தோம். பெரும்பாலான பரீட்சார்த்திகள் அதிக புள்ளிகளை சரியான விடைகளுக்குப் பெற்றிருந்தனர். எனினும் பின்வரும் பலவீனங்கள் காரணமாக சில பரீட்சார்த்திகள் குறைந்த புள்ளிகளையே பெற்றனர்:

(1) கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளைப் பெயரிடல் மாற்றமடைந்துள்ளது.

(2) மிகை கேள்வியும் நிரம்பலும் அவை சமநிலை விலைக்கு மேலாகவா / கீழாகவா என்பது குறிப்பிடப்படவில்லை.

(3) மிகை கேள்வி மற்றும் மிகை நிரம்பல் என்பவற்றைப் பெயரிடும்போது அவை மாறியுள்ளன.

(4) உச்ச மற்றும் ஆகக் குறைந்த விலைகள் சரியாகக் குறிக்கப்படவில்லை.

உதாரணம் :-










**(b)** இவ்வினாவில் தனியுரிமையின் பிரதான இயல்புகளைக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆனால் சிலர் பின்வருவனவற்றை இயல்புகளாக எழுதியிருந்தனர்.
உதாரணம்:

(1) தனியுரிமைப் போட்டியினைப் பேணுதல்

(2) பதிலீடுகளை உற்பத்தி செய்தல்

(3) பெரும் எண்ணிக்கையிலான வழங்குநர்களும் நுகர்வோரும்

**(c)** இப்பகுதியில் ஒரு தனியுரிமையாளன் எவ்வாறு தனது இலாபங்களை உச்சப்படுத்துவான் என்பதை வரைபொன்றின் துணையோடு விளக்கும்படி கேட்கப்பட்டது. மிகச் சிலரே சரியான விடைகளை எழுதியிருந்தமையைக் காண முடிந்தது. பின்வரும் பலவீனங்கள் காணப்பட்டன:

(1) MR = MC எனும்படிக்கு இலாபம் உச்சப்படுத்தல் பற்றித் தெரிந்திருக்காமை.

(2) தனியுரிமைச் சமநிலைக்குப் பதிலாக நிறைபோட்டிச் சமநிலையைக் காட்டி யிருந்தமை

(3) MR, MC, AC வளையிகளை விளக்குவதன் மூலம் சமநிலையை உருவாக்குதல்

(4) பின்வரும் பிழையான வரைபுகளைக் காட்டுதல்:









**வினா இல. 04** – 15 புள்ளிகள்

**(தெரிவு வினா)**

**(a)** இவ்வினா "உபேட்சை வளையி படம்" என்பதன் கோட்பாட்டு அறிவைச் சோதிக்கின்றது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவைத் தெரிவுசெய்திருக்கவில்லை. இதற்கு விடையளித்திருந்த பரீட்சார்த்திகளும் சிறப்பாகப் புள்ளிகளைப் பெறவில்லை. காரணங்கள் வருமாறு,

(1) உபேட்சை வளையியைக் கீறி அதன் இயல்புகளை விளக்கியமை

(2) உபேட்சை வளையி படத்திற்குப் பதிலாக கேள்வி வளையியைக் காட்டியிருந்தமை

**(b)** இவ்வினா, பயன்கோட்பாட்டின் குறைபாடுகள் பற்றிய மாணவர்களது அறிவைச் சோதிக்கின்றது. பரீட்சார்த்திகளில் ஒரு சிலர் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் பொருத்தமில்லாத விடைகளையே தந்திருந்தனர். அதற்கான காரணங்கள் பின்வருமாறு:

(1) கோட்பாட்டு அறிவு குறைவாக இருந்தமை

(2) எல்லைப் பயனுக்கான குறைபாடுகள் தரப்பட்டிருந்தமை

(3) எல்லைப் பயனையும் மொத்தப் பயனையும் ஒப்பிட்டுக் காட்டுவதாக விடைகள் எழுதப்பட்டிருந்தமை

**(c)** அத்தியாவசியப் பொருள் ஒன்றுக்கான வரியொன்றை அரசாங்கம் விதிக்கும்போது அவ்வரி நுகர்வோனுக்கும் வழங்குவோனுக்குமிடையில் எவ்வாறு பகிரப்படுகின்றது என்பதை எழுதும்படி மாணவரிடம் இவ்வினா கேட்கின்றது. இது ஒரு எளிமையான வினாவாக இருந்தபோதிலும் பரீட்சார்த்திகளில் ஒரு சிலரே இதற்குச் சரியான விடையை அளித்துள்ளனர்.
அதற்கான காரணங்கள் :

(1) வரிக்குப் பின்னால் நிரம்பல் வளையி காட்டப்படாமை

(2) வரைபில் வரித் தொகையை (tax quantity) பிழையாகக் காட்டியுள்ளமை

(3) நுகர்வோனதும் வழங்குவோனதும் வரித்தொகையானது சரியாக வரைபில் காட்டப்படாமை

உதாரணம்:



**வினா இல. 05** – 15 புள்ளிகள்
**(தெரிவு வினா)**

**(a)** இதில் தேசியக் கணக்கின் அடிப்படை அறிவு பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்த போதிலும் அவை திருப்திகரமாக இருக்கவில்லை. பின்வரும் பலவீனங்கள் கண்டறியப்பட்டன:

(1) எண்ணக்கருக்கள் சரியாக விளங்கப்படவில்லை

(2) இதனை ஒரு வரி முறையாகவே இனங்கண்டுள்ளனர்

(3) இரட்டைக் கணித்தல் பிழைகள்

(4) பெறுமானம் சேர்க்கப்பட்டதை விளக்கும்போது மொத்த தொழில்நுட்பமும் கைத் தொழில் சேவைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டமை

**(b)** இப்பகுதிக்குச் சிறியளவிலான பரீட்சார்த்திகளே சரியான விடைகளைத் தந்துள்ளனர்.

(1) GDP உள்ளூர் மொத்த உற்பத்தியைக் கணக்கிடும்போது தனிப்பட்ட நுகர்வு, அரசாங்க நுகர்வு, தேறிய முதலீடு ஆகியன மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

(2) மெய் உள்ளூர் மொத்த உற்பத்தியைப் பிழையாகக் கணக்கிட்டுள்ளமை. உதாரணம்:-

$$\frac{29,700}{100} \times 150 = \mathbf{\underline{44,550}}$$

(3) ஒரு சிலரே மெய் உள்ளூர் மொத்த உற்பத்தியைச் சரியாக எழுதியுள்ளனர். பெரும்பாலானோர் சரியாக,

$$\frac{29,700 - 18,000}{18,000} \times 100$$

என்றவாறு விடையளித்துள்ளார்கள். மேற்கூறப்பட்ட காரணங்களால் பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**(c)** தேசிய கணக்கிடுதலின் முக்கியத்துவத்திற்காகத் தரப்பட்ட விடைகள் பொருத்தமற்ற வைகள் ஆதலால் குறைவான புள்ளிகளே பெற்றுள்ளனர்.

உதாரணமாக,

(1) எளிமை (Simple), பிழையின்மை (accuracy), அகற்றல் (clear) ஆகியன முக்கியத் துவத்திற்காக எழுதப்பட்டுள்ளன.

(2) நாட்டின் பணவீக்கம் அறிந்துகொள்ளக்கூடியது எனக் குறிப்பிட்டுள்ளமை

**வினா இல. 06** – 15 புள்ளிகள்
**(தெரிவு வினா)**

இவ்வினாவானது பணம், பண நிரம்பல், வட்டி வீதங்கள் ஆகியன பற்றிய கோட்பாட்டறிவைப் பரிசீலித்தது.

**(a)** பண நிரம்பலைப் பாதிக்கின்ற அரச காரணிகளை எழுதும் ஆற்றல் ஒரு சிலருக்கே இருந்தது. அதற்கான காரணங்கள்:

(1) குறுகிய பணம், விரிந்த பண நிரம்பல் பற்றி அறிமுகப்படுத்தல்

(2) திரவத் தன்மையைப் பேணுதல்

(3) பணத்துக்கான கேள்வியின் பிரதான காரணிகளை விபரித்தல்

(4) தாள்கள், நாணயங்கள் விநியோகித்தல், அகற்றுதல் போன்ற காரணிகளை முன்வைத்தல்

**(b)** நிரம்பலுக்கும் பொது விலை மட்டத்திற்கும் இடையிலான தொடர்பினை விளக்கும்படி இவ்வினாவில் கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலானோர் எதிர்மறையான தொடர்பு இருப்பதை எழுதியிருந்தபோதிலும் பொது விலை மட்டத்தில் அதிகரிப்புக்கான காரணங்களைத் தரவில்லை. இதன் காரணமாக பெருமளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் குறைந்த புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

**(c)** ஒரு நாட்டின் வட்டி வீதத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களுக்கு ஒரு சிலரே சரியான விடைகளைத் தந்துள்ளனர். பெரும்பாலானோர் சேமிப்பு வங்கி ஒன்றில் சேமிப்பை ஊக்குவிக்காமையே சேமிப்புகள் வீழ்ச்சிக்கான காரணமாக எழுதியுள்ளனர். வட்டி வீதங்களில் வீழ்ச்சி, முதலீடுகளில் வீழ்ச்சி, அபிவிருத்தியில் வீழ்ச்சி ஆகியன பரீட்சார்த்திகளால் எழுதப்பட்ட சில பொருத்தமில்லாத காரணிகளாகும். இவையே குறைந்த புள்ளிகள் பெறக் காரணமாகும்.

**வினா இல. 07** – 15 புள்ளிகள்
**(தெரிவு வினா)**

இவ்வினாவின் குறிக்கோள் பொதுநிதி பற்றிய அறிவை அளவிடுவதாகும்.

**(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள், அரசாங்கப் பாதீட்டின் நடைமுறைக் கணக்கின் முக்கியத்துவத்திற்கான விடைகளை எழுதியுள்ளனர். எனினும் சிலர் பின்வரும் காரணங்களால் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்:

(1) நடைமுறைக் கணக்கை விளக்குதல்

(2) அரசாங்கப் பாதீட்டின் நிலைமைகளை முன்வைத்தல்

(3) மூலதனக் கணக்கின் முக்கியத்துவத்தை விபரித்துள்ளமை

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு தனியாள்களுக்கு நடைமுறை மாறல்கள் பற்றி விபரித்து எழுதி அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**(c)** (i) ‘‘உட்கட்டமைப்பு வசதிகளில் முதலீடு செய்வதற்குத் தற்போது இலங்கை அரசாங்கம் முன்னுரிமை அளிக்கின்றது’’ எனும் தரப்பட்ட கூற்றுக்கு பலர் உடன்படுவதாக எழுதி அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர். ஆனால் அவர்கள் உதாரணங்களைச் சரியாகத் தரவில்லை. பொருளாதாரத்திலுள்ள மாற்றங்களைப் பற்றிய அறிவை பரீட்சார்த்திகள் இற்றைப் படுத்திக்கொள்ளாமையே காரணங்களாகும்.

(ii) முதலீட்டிற்கான காரணங்களைச் சரியாகத் தந்து கூடிய புள்ளிகளைப் பெரும்பாலானவர்கள் பெற்றுள்ளனர்.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் மட்டத்தை அபிவிருத்தி செய்வதில் கவனத்தில் கொள்ள வேண்டிய பொதுவான குறிப்புகள்:</u>**

1. முழுப் பாடத்திட்டத்தையும் முறையாகக் கற்க வேண்டும்.

2. வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

3. வினாவை பலமுறை வாசித்துவிட்டு வினாவில் கேட்கப்பட்ட விடயத்திற்கு மட்டும் விடை எழுதுங்கள்.

4. கடந்தகால வினா விடைகளைப் பயில்வதன் மூலம் உங்களது அறிவை விருத்தி செய்து கொள்ளலாம்.

5. பொருளாதாரங்களின் எண்ணக்கருக்களைக் கற்பதன் வழியாக எண்ணக்கருக்களையும் கோட்பாடுகளையும் ஒப்பிடக்கூடிய அறிவை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

6. பொருளியலுடன் தொடர்புடைய புத்தகங்கள், சஞ்சிகைகள், கைந்நூல்கள், செய்தி மடல்கள், மத்திய வங்கி அறிக்கைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துங்கள்.

7. வரைபுகளை மிகச் சரியாகப் பெயரிட்டு விளக்குங்கள்.

8. தெளிவான, வாசிக்கக்கூடிய கையெழுத்தில் விடைகளை எழுதுவதோடு வினா இலக்கங்களைச் சரியான ஒழுங்கில் குறிப்பிடவும்.

9. நேரத்தை முறையாக முகாமைத்துவம் செய்யுங்கள்.

10. விடைகளை எழுதும்போது தேவையான இடங்களில் உதாரணங்களைத் தந்து, எண்ணக்கருக்களையும் கோட்பாடுகளையும் தர்க்க ரீதியாக முன்வைக்கவும்.

11. விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்பு, சுட்டெண், வினா இலக்கங்கள் ஆகியன சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதை மீளவும் சரிபார்த்துக்கொள்ளவும்.

12. போதியளவு முன்னாயத்தத்தோடும் பரீட்சையில் சித்தியடைவதையே பிரதான உள்நோக்கமாகக் கொண்டும் பரீட்சைக்கு அமருங்கள்.

- * * * -